யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020–தரம் 07
First Term Examination – 2020–Grade 07

சைவநெறி	12	T	I, II	இரண்டு மணித்தியாலம் Two Hours

சுட்டெண் Index No

சைவநெறி

பகுதி - I
மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

1. சைவ சமயத்தவர்களால் முதன்மை கொடுத்து வழிபடப்படும் ஓங்காரப் பொருளாக விளங்கும் கடவுள்

   1. சிவபெருமான் 2. அம்பிகை 3. விநாயகர் 4. முருகன்

2. திருச்சிராப்பள்ளி குன்றுடையானுக்கு வழங்கப்படும் பெயர்

   1. உலகநாதர் 2. தாயுமானவர்
   3. குடுமித்தேவர் 4. வைத்தியநாத தேசிகர்

3. திருச்சிராப்பள்ளிக்கும் திருவானைக்காவிற்கும் இடையே உள்ள ஆறு

   1. கங்கை 2. நர்மதா 3. காவேரி 4. சரஸ்வதி

4. நவராத்திரி விரத காலங்களில் பாடசாலைகளில் மாணவர்கள் சிறப்பாக ஓதுவது

   1. சிவபுராணம் 2. சகலகலாவல்லி மாலை
   3. திருப்புராணம் 4. கந்தசஷ்டி கவசம்

5. பாடசாலைகளில் நடைபெறும் சைவசமய விழாவாக அமையாதது

   1. வாணிவிழா 2. பொங்கல் விழா
   3. நாயன்மார் குருபூசை 4. ஆசிரியர் தின விழா

6. “மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகெலாம்” எனப் பாடியவர்.

   1. கச்சியப்பர் 2. திருமூலர் 3. அருணகிரிநாதர் 4. உலக நாதர்

7. சைவ நெறி கூறும் பஞ்சமா பாதகங்களில் அடங்காதது

   1. கொலை 2. பொய் 3. இன்பம் 4. கள்உண்ணல்

www.lkedu.lk

8. வீடொன்றைக்கட்டுவதற்கு தகுந்த விதிமுறைகளை கூறும் நூல்

1. ஆகம சாஸ்திரம்
2. மனையடி சாஸ்திரம்
3. சிற்பசாஸ்திரம்
4. வேதங்கள்

9. ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்குபவர்

1. சிவன்
2. முருகன்
3. விநாயகர்
4. விஸ்ணு

10. பஞ்சபுராணம் ஓதும் போது இறுதியில் பாடப்படுவது

1. தேவாரம்
2. பெரியபுராணம்
3. திருவிசைப்பா
4. திருவாசகம்

11. வெள்ளிக்கிழமை தோறும் பாடசாலைகளில் மாணவர்கள் சிறப்பாக ஓதுவது

1. சிவபுராணம்
2. திருவிசைப்பா
3. தேவாரம்
4. திருப்புராணம்

12. அடங்கன் முறை என அழைக்கப்படுவது

1. முதல் எட்டு திருமுறைகள்
2. முதல் ஏழு திருமுறைகள்
3. முதல் மூன்று திருமுறைகள்
4. முதல் ஆறு திருமுறைகள்

13. சிவதரிசனப் பலனை வேண்டி வழிபடப்படும் கடவுள்

1. விநாயகர்
2. துவார பாலகர்
3. நந்தி தேவர்
4. சண்டேசுவரர்

14. தைப் பொங்கலுக்கு முதல் நாளாகிய மார்கழி மாதத்தின் இறுதித் திகதியில் கொண்டாடப்படும் பண்டிகை

1. உழவர் திருநாள்
2. போகிப்பண்டிகை
3. பட்டிப் பொங்கல்
4. தீபாவளி

15. முப்புரங்களையும் நீறாக்கும் படி அளித்தவர்

1. சிவபெருமான்
2. இராவணன்
3. விசுவாமித்திரன்
4. சூரபன்மன்

16. சுந்தர மூர்த்தி நாயனார் முத்தி அடைந்த தினம்

1. வைகாசி மூலம்
2. ஆனி மகம்
3. சித்திரை சதயம்
4. ஆடிச்சுவாதி

17. திருநாவுக்கரசு நாயனார் பிறந்த இடம்

1. பாண்டி நாடு
2. திருமுனைப்பாடி நாவலூர்
3. திருமுனைப்பாடி திருவாரூர்
4. சோழ நாடு சீர்காழி

www.lkedu.lk

18. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது

1. பணிவு 2. நன்றி மறவாமை 3. நேர்மை 4. பொறுமை

19. "அதர்ம வழி சென்றால் அழிவிலிருந்து தப்பிக்க முடியாது உலகம் உன்னை பழி தூற்றும்" என கூறியவர்

1. கர்ணன் 2. குந்தி தேவி 3. கண்ணன் 4. வசிட்டர்

20. சிவசின்னங்களில் ஒன்று அல்லாதது எது

1. விபூதி 2. உருத்திராக்கம் 3. குங்குமம் 4. காவியுடை

(20 x 2 = 40 புள்ளிகள்)

பகுதி - II

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக

01. பின்வரும் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக

1. "நிரைகழலரவம் சிலம்பொலியலம்பு….."
2. "விருது குன்றமா மேருவில்……."
3. "மாதர் பிறைக் கன்னியானை……."

(02 x 06 = 12 புள்ளிகள்)

02. 1. திருச்சிராப்பள்ளிக்கும் திருவானைக்காவிற்கும் இடையே உள்ள ஆறு எது?
2. திருவானைக்காவில் வாழ்ந்து வந்த மூதாட்டி செய்து வந்த இறை தொண்டு யாது?
3. தாயுமானசுவாமி எனத் திருச்சிராப்பள்ளிக் குன்றுடையான் அழைக்கப்பட காரணம் யாது?
4. தாயுமான சுவாமி என்ற கதை மூலம் நாம் பெற்றுக் கொண்ட படிப்பினை யாது?

(2 + 2 + 4 + 4 = 12 புள்ளிகள்)

03. 1. திருஞான சம்பந்தர் நிரைகழலரவம் எனும் பதிகத்திலே திருகோணமலை கடல் அலையானது எவற்றை அள்ளி வீசுகிறது என்கிறார்?
2. முப்புர அசுரர்களும் கோட்டைகளும் எவை?
3. சிவபெருமான் எவ்விதம் திரிபுரத்தை எரித்தார்?

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

04. 1. நன்றிமறவாமை என்ற பண்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைபவர்கள் இருவர் பெயர் தருக?
2. சோழவளநாட்டை ஆண்ட மன்னன் யார்?
3. விழுமியம் என்ற சொல்லின் வரைவிலக்கணம் யாது?

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

www.lkedu.lk

05. 1. கிரகப்பிரவேசம் என்றால் என்ன?

2. வீடொன்றைக்கட்டும் போது இடம்பெறும் முக்கிய நிகழ்வுகள் இரண்டு தருக?

3. வீடொன்றைக் கட்டும் போது அத்திவாரத்தினுள் இடப்படும் 4 பொருட்கள் தருக?

4. கிரகப் பிரவேச தினத்தன்று ஆலயத்திலிருந்து எடுத்துவரப்படும் மங்களப் பொருட்கள் 8 தருக?

(2 + 2 + 4 + 4 = 12 புள்ளிகள்)

06. 1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் 2 தருக?

2. "நிரைகழலரவம்……", "விருது குன்றமா….." எனும் பதிகங்களின் பண்களை தருக?

3. திருஞானசம்பந்தர் செய்த இரு அற்புதங்களையும் அதன் போது பாடிய தேவாரங்களையும் தருக?

4. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்? தேவார முதலிகள் யாவர்?

(2 + 2 + 4 + 4 = 12 புள்ளிகள்)

07. எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு தருக

1. பொறுமை
2. பண்டிகைகள்
3. தாயுமான சுவாமிகள்
4. குடிபுகுதல்

(6 x 2 = 12 புள்ளிகள்)

www.lkedu.lk